Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 260

யாழ்ப்பாணம் ஐப்பசி 13 தமிழான் 10 சனிக்கிழமை (30-10-71)

'செல்வம் உள்ள மூடரினும், வறுமையுள்ள வித்துவான்களே எங்கும் நன்கு மதிக்கப்படுபடுவார்கள்.'

— ஆறுமுகநாவலர்.

மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளை சேகரித்து அனுப்பி அறிவு நூல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்சோப் தொழிற்சாலை

த. பெ. இல. 77,
யாழ்ப்பாணம்.

# கலை கலாசாரத்தை காப்பவரை அடிமையாக்க முடியாது

## நிக்சன் சீனவுக்கு செல்லும் வழி?

டோக்கியோ, அக். 29

அமெரிக்க அதிபர் நிக்சன் சீனவுக்கு விஜயம்செய்யும் பொழுது எவ்வழியாகச் செல்வார் என்பது பற்றி உத்தியோகபூர்வமாக இதுவரை அறிவிக்கப்படவில்லை.

அதிபர் நிக்சனின் ஆலோசகர் டாக்டர் ஹென்றி கிஸிங்கர் சீனவுக்குச் சென்ற பாதை வழியாகவே அதிபரும் செல்வார் என நம்பிக்கையான அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

டாக்டர் கிஸிங்கர் கடந்த வாரம் ஹொனலுலு, ஹவாய், குவாம், ஷாங்காய் வழியாகப் பீக்கிங் சென்றார். இதே பாதையில் இவ்விடங்களில் தங்கி அதிபர் தனது விஜயத்தை மேற்கொள்வார் எனத் தெரிகிறது. அமெரிக்க அதிபர் செல்லும் பாதையின் பாதுகாப்பை உத்தேசித்தே இவ்வழியாக அமெரிக்க விசேஷ விமானத்தில் டாக்டர் கிஸிங்கர் சென்றார் என்று நம்பப்படுகிறது.

## நாவலர் முத்திரை வெளியீட்டு விழாவில் மந்திரி குமாரசூரியர்

யாழ்ப்பாணம், சனி

கலை, கலாச்சாரம், பண்பாட்டை முதலில் அழிக்காவிடில் ஒரு மனிதனை அடிமையாக்கமுடியாதென்பதை அறிந்துதான் அந்நியர் ஆட்சியின்கீழ் எமது பொருளாதாரத்தில் முதலில் கைவைக்காமல், கலை, கலாச்சாரம், பண்பாடு முதலியவற்றில் முதலில் கைவைத்தார்கள். இதனைத்தான் நமது நாவலர்போன்ற பெரியார்கள் எதிர்த்துவந்தார்கள். கலை, கலாச்சாரத்தை கடைசிவரை பேணிக் காப்பவனை என்றுமே அடிமையாக்க முடியாது.

நேற்று நல்லூரில் நடந்த நாவலர் முத்திரை வெளியீட்டுவிழாவில் உரையாற்றிய தபால் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் மேற்கண்டவாறு கூறினார்.

### ஆலயத்தில் வழிபாடு

நல்லூர் கந்தசாமி கோவிலில் நடந்த விசேஷ வழிபாட்டில் அமைச்சரும் அவரது பாரியாரும் கலந்துகொண்டனர். அங்கிருந்து நாவலர் மண்டபத்திற்கு வந்தபோது நாவலர்சபைத் தலைவர் திரு வி சுப்பிரமணியம், அமைச்சருக்குமாலை சூட்டி வரவேற்றார். அமைச்சர் நாவலர் சிலைக்கு மாலை சூட்டினார். அவரைத்தொடர்ந்து நல்லூர் எம்.பி. திரு. சி. அருளம்பலம், அரசாங்க அதிபர் திரு. விமல அமரசேகர, யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா, திரு. வி. சிவசுப்பிரமணியம், நந்தா ராமதேரோ ஆகியோர் நாவலர் சிலைக்குமாலைசூட்டினர்.

அவ்விழாவில் கிளிநொச்சி எம்.பி. திரு வி ஆனந்தசங்கரி, வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ தியாகராசா, நியமன எம் பி திரு எம் ஸி சுப்பிரமணியம், தபாலமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு தயா கருணாரத்ன உட்பட பெருந்திரளானோர் கலந்துகொண்டனர். யாழ்ப்பாணம் நல்லூர் தொகுதிகளிலுள்ள இரண்டு மூன்று பாடசாலைப் பிள்ளைகளின் நாவலரைவாழ்த்தும்சுலோக அட்டைகள்தாங்கி வந்திருந்தனர்.

### முதல் முத்திரையை அமைச்சர் வாங்கினார்

நாவலர் சிலைக்கு அருகில் முதலாவது நாவலர் திருவுருவ முத்திரையை தபால் தந்தி அத்தியட்சகர் திரு எம் நடராசாவிடமிருந்து அமைச்சர் பெற்றுக்கொண்டார். இதைத்தொடர்ந்து அரசாங்க அதிபர், நல்லூர் எம் பி, நகர மேயர் மற்றையோர் முத்திரைகளைப்பெற்றுக்கொண்டனர்.

முத்திரை வெளியீட்டு விழா கூட்டத்திற்கு நல்லூர் எம். பி திரு. சி. அருளம்பலம் தலைமை தாங்கினார். அமைச்சர் குமாரசூரியர் இவ்விழாவில் கூறியதாவது:-

ஐக்கிய முன்னணி அரசாங்கம் சார்பாக, இந்நாட்டின் கலை, கலாச்சாரம், தத்துவஞானம், மொழி ஆகிய துறைகளை பேணிக்காப்பாற்றிய ஐந்து பெரியார்களுக்கு ஞாபகார்த்த முத்திரை

6-ம் பக்கம் பார்க்க

## கிராமசபை பிரிவுகளுக்கு சிறப்பான எதிர்காலம்

### அ.பசின் திட்டங்கள் பற்றி மன்னார் அரசாங்க அதிபர்

வேதீஸ்வரம், வெள்ளி

"கிராமசபைப் பிரிவுகளை அடிப்படையாக வைத்தே எதிர்காலத்தில் நாட்டை முன்னேற்றும் திட்டங்கள் பலவற்றை அமுலாக்க அரசாங்கம் முனைந்துள்ளது. அதனால் கிராமசபைகளின் முக்கியத்துவம் இன்னும் அதிகரிக்கப்போகின்றது. இத்தகைய கிராமசபை பலநல்லசேவைகளை வருங்காலத்தில் ஆற்றுவதற்கு இதன் இப்புதியகாரியாலயம் நன்கு பயன்படும்".

இவ்வாறு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு சு. கதிர்காமநாதன், மாந்தை மேற்குக் கிராமசபையின் புதிய காரியாலயக் கட்டடத் திறப்புவிழாவில் தேசியக்கொடியை ஏற்றிவைத்து வாழ்த்து வழங்குகையில் குறிப்பிட்டார். நிகழ்ச்சிகளுக்கு கிராமசபைத்தலைவர் திரு. பி. வர்ஞந்து தலைமை வகித்தார். மன்னார்மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட், குத்துவிளக்கேற்றி கட்டடத்தை திறந்துவைத்தார்.

இத்திறப்புவிழாவின் போது, பல விளையாட்டுப் போட்டிகள் பொதுமக்களிடையேயும் பாடசாலைகளிடையேயும் நடாத்தப்பட்டன. வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. இவற்றிற்கு மன்னார் மாவட்ட விளையாட்டுப் பகுதி உத்தியோகத்தர் திரு மு. ஜீவரத்தினம் மேற்பார்வையாளராகஇருந்தார்.

மன்னார் காரியாதிகாரி திரு. கே. தயாபரன், மாந்தைப்பிரிவுக் காரியாதிகாரி திரு மு. சுப்பிரமணியம், முசலிப்பிரிவுக் காரியாதிகாரி திரு வை. சொக்கலிங்கம், மன்னார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகர் ஜனாப் என் எஸ் ஏ காதர் ஆகியோரும் உரையாற்றினார்கள். கிராமசபை விகிதர் திரு சு. ஸ்ரீகாந்தன் நன்றிகூறினார்.

## பேய்மழைக்கு இதுவரை மதுரையில் 9 பேர் பலி

மதுரை, ஒக் 29

மதுரையில் தொடர்ந்து பெய்த பேய்மழைக்கு இதுவரை 9 பேர் பலியாகியுள்ளனர். சென்ற புதன்கிழமை 6 பேர் மாண்டனர். இன்று கிடைத்த செய்தியின்படி 3 பேர் மேலும் உயிரிழந்ததாக தகவல் தெரிவிக்கிறது.

பலர் வீடுகளை இழந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர். மதுரை மாவட்டத்தில் இந்தப் பேய் மழையினால் 10 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்படுகிறது.

## 'தமிழையும் சைவத்தையும் யாராலும் அழிக்க முடியாது'

— தபால் அமைச்சர்

யாழ்ப்பாணம், சனி

'போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஒருவர்பின் ஒருவராக எம்மை அடிமைப்படுத்தி வந்தார்கள். அப்படியிருந்தும் நமது மொழியும் சமயமும் அழிந்துவிடவில்லை. தமிழ் மொழி உலகில் எத்தனையோ இடங்களில் பரவி பலபோர்களைக் கண்டு அழிவுகளை எதிர்த்து இன்றும் வாழ்ந்து வருகிறது. எமது மொழி இன்று நேற்று உண்டானதல்ல. அதேபோல் இன்று நாளை அழியப் போவதுமில்லை.'

[illegible] முத்திரை வெளியீட்டு விழாவில் தபாலமைச்சர் திரு. செ. குமாரசூரியர் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சரும் அவரது பாரியாரும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குச் சென்று வழிபட்ட பின்னர் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். ஊர்வலத்தில் உடுவில் எம். பி. திரு. வி தர்மலிங்கம் கலந்துகொள்ளவில்லை. உடுப்பிட்டி எம். பி. நேராகவே தபாலகத்தோருக்கு வந்திருந்தார்.

ஊர்வலமாக அமைச்சர் தபாற்கந்தோர் வாசலை வந்தடைந்ததும் உடுவில் எம்பியும் தபாற்தந்தி அத்தியட்சகரும் அமைச்சரை வரவேற்றனர். அமைச்சர் குமாரசூரியர் உடுவில் எம் பி திரு வி தர்மலிங்கத்தை இறுக்கமாகக் கட்டியணைத்துக்கொண்டபோது அங்கிருந்தவர்கள் கரகோஷம் செய்தனர்.

தபாற்தந்தி அத்தியட்சகரிடமிருந்து அமைச்சர் முத்திரையைப் பெற்றுக்கொண்டார். அவரைத்தொடர்ந்து மற்றையோர் முத்திரைகளைப் பெற்றுக்கொண்டனர்.

கலாயோகி முத்திரை வெளியீட்டு விழாவுக்கு உடுவில் எம் பி திரு. வி. தர்மலிங்கம் தலைமைதாங்கினார். இவ்விழாவில் திரு வி பொன்னம்பலம், வட்டுக்கோட்டை

6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

அப்பளம் தயாரிப்புத் தேர்ந்த உழுந்தமா. நவீன இயந்திரங்கள் மூலம் அனுபவமிக்க தொழிலாளர்களால் அரைத்து, அரித்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்: முகமது கிறைன்டிங் மில்ஸ், 443, கே. கே. எஸ் ரோட், யாழ்ப்பாணம். 3675

### விற்பனைக்கு

"சன்யோ" ஸ்ரீரியோ றேடியோ கிரும், இரண்டு இணைப்பு ஒலிபெருக்கியுடன் ரூபா 4,500/-, 'நிக்சி' தானே இயங்கும் தையல் மெஷின் புதிய மொடெல் இல: 544 ரூபா 3,250/-, பிறிஸ்ரிஜ் ப்றெஷர் குக்கர் ரூபா 250/-, பற்றறியில் இயங்கும் எடுத்துச் செல்லக்கூடிய றெக்கோட் பிளேயர் ரூபா 390/-ஜப்பானில் தயாரிக்கப்பட்டது (ஸ்லிம் புரூஜெக்டர்) ரூபா 300/- விற்பனைக்குண்டு. இன்று பார்வையிடலாம். 31-10-71க்கு விற்பனையாகும். விலாசம்: U.M. Doranagama (E.M.V.Jaffna) சம்பியன் ரோட், கொக்குவில் 3695

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

திருநாளா! திருமணமா! கலப்பற்ற அசல்பட்டுச் சேலைகள், வேட்டி சால்வைகளுக்கு விஜயம் செய்யுங்கள்: வசந்தபுரம் சில்க்ஸ், 7, 2-ம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 3639

பலவித நவதானியங்களும், கோழித்தீனி வகைகளும் மருந்துச்சரக்கு வகைகளும், வெவ்வேறு யந்திரங்கள் மூலம் அரைத்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு:- V. சிவானந்தன் மஹேஸ்வரன் மில்ஸ், 46/1 பிரவுண் ரோட், யாழ்ப்பாணம். 3694

MANOHARA
Jaffna
Daily 4-45, 7, &
9-45 p. m.
Sat. Sundays 10-30 a. m.
Norman Wisdom
in
WHAT IS GOOD
FOR GOOSE
(Is a best commedy Film)

**சாந்தி சினிமா**
(சங்கானை)
சனி, ஞாயிறு பி. ப. 4-15
ISTANBUL EXPRESS
தினசரி 6-30, 9-30
விளையாட்டுப்பிள்ளை

### வாடகைக்கு

மணிக்கூட்டு வீதியிலுள்ள பலசரக்குக் கடையொன்று வாடகைக்கு கொடுக்கப்படும். பெருமாள் கோவிலுக்கு அருகாமையிலும், சென்யர் பாடசாலைக்கு முன்பாகவும் உள்ள கடை. முழு விபரங்களுக்கு நேரில் வரவும். வா. மகேந்திரன், இல. 60, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 3698

விளையாட்டுத்துறையில்

## பாடசாலைகளின் பங்குபற்றி அமைச்சர்

காலி, வெள்ளி

உடற்பயிற்சிப் போட்டிகளில் நாட்டிலுள்ள பாடசாலைகள் அதிக அக்கறை எடுக்காவிட்டால் விளையாட்டுத் துறையை விருத்தி செய்வதற்காக அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வீணாகி விடும்'

இவ்வாறு ஆசிமன்ற விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. கே. பி. இரத்னாயக்கா காலி றிப்பன் பாலிக வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

விளையாட்டுத்துறையை மேலும் விருத்திசெய்யும் பொருட்டு விளையாட்டுத் துறை அமைச்சின் செலவுக்கென அடுத்தவரவுசெலவுத்திட்டத்தில் அதிக தொகை ஒதுக்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## இராணுவம் தேவைதானும்

கைதடி, வியாழன்

'வடபகுதி இராணுவத்தினரை இன்னும் உஷார் படுத்தவேண்டும். போதாவிட்டால் அவர்களின் தொகையை அதிகரிக்க வேண்டும்' என்று கைதடி வடக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடந்த லங்கா சமசமாசக் கட்சிக் கைதடி கிளை வாலிபர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது வடபகுதி சக வாலிபர் சம்மேளனத் தலைவர் திரு எஸ் இராசநாயகம் கூறினார்.

திரு வி குமாரசாமி தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் பின்வருவோர் புது வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்-குமாரசாமி, உப தலைவர் எஸ் கமலநாதன், செயலாளர்- எஸ் சிவரத்தினராசா, உப செயலாளர்- எஸ் பரமலிங்கம், பொருளாளர்- ஏ வேலுப்பிள்ளை. ஏழுபேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## வரவேற்பு

யாழ்ப்பாணம், சனி

கொழும்பு திருச்சபையின் புதிய அத்தியட்சகர் அதிவண. சி எல் ஆனநாயகத்தையும் அவரது பாரியாரையும் கௌரவிக்குமுகமாக யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் அடுத்தமாதம் 6-ம் திகதி வரவேற்பு நடாத்தப்படவுள்ளது.

### யாழ்ப்பாணம் மாநகர பலநோக்கு கூட்டுறவுச் சங்க லிமிடெட்
### யாழ்ப்பாணத்தில் மின்தறி தொழில் நிலையத்தை நிர்மாணிப்பதற்கான
## கேள்விப் பத்திரம்

மேற்படி நிர்மாண வேலைகளுக்கான கேள்விகளை யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவுச்சங்க லிமிட்டெட் பொதுமுகாமையாளர் 1971-ம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ந் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்வார்.

2. யாழ். மாநகர பலநோக்கு கூட்டுறவுச் சங்க லிமிட்டெட்டில் 15-11-71ந் திகதி மாலை 3-30 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும் பொழுது கேள்விக்காரர்கள் பிரசன்னமாக இருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

3. யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவுச்சங்க லிமிடெட் செயலாளரிடமிருந்து பெறும் விண்ணப்பப்பத்திரங்களில் கேள்விகள் கோரப்பட வேண்டும். இப்பத்திரங்களை 10-11-71ந் திகதி பகல் 12 மணிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளலாம். பத்திரங்கள் பெறும் போது கேள்வி வைப்புப் பணமாக ரூபா 200/-ம், கேள்விப்பத்திரத்துக்காக ரூபா 25/-ம் செலுத்த வேண்டும். இந்த ரூபா 25/- திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. கேள்வி வைப்புப் பணமான ரூபா 200/- தெரிவு செய்யப்படாத கேள்விக்காரர் வேண்டிய விதிகளுக்கமைய ஒப்பந்தம் கைச்சாத்திட்டதும் கேள்விக்காரர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்.

4. எல்லாக் கேள்விகளும் பிரதியுடன் அரக்குமுத்திரையிடப்பட்டவைகளாக இருக்க வேண்டும். கேள்விகள் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் 'யாழ்ப்பாணத்தில் மின்தறி தொழில்நிலைய நிர்மாணம்' என எழுதப்பட்டிருக்க வேண்டும்.

5. மாநகரசபையுடனோ அல்லது பொதுவேலைப்பகுதியுடனோ ரூபா 50000/-க்கும் குறையாது பதிவு செய்து கொண்ட கொந்தராத்துக்காரர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

6. மாதிரிப் படங்களை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

7. இதுபற்றிய மேல் விபரங்களை செயலாளருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

கே. தியாகலிங்கம்,
பொதுமுகாமையாளர்,
யாழ். மாநகர ப.நோ.கூ.ச. லிமிடெட்.
யாழ்ப்பாணம் மாநகர பலநோக்கு கூட்டுறவுச் சங்க லிமிடெட்,
74/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,
28-10-71. 3099

புதுடில்லி, அக் 29

சீனாவில் நடைபெறும் ஆசிய ஆபிரிக்க டேபிள் டென்னிஸ் போட்டியில் பங்கு பற்றுவதற்கான இந்திய வீரர்கள் கோஷ்டி இன்று இங்கிருந்து புறப்பட்டுச் சென்றது.


**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சௌகார்ஜானகி - ரவிச்சந்திரன்
(இரு வேடங்களில்)
நடித்த
**காவியத்தலைவி**

**ராணி** (யாழ்ப்பாணம்) ஜெய்சங்கர் — விஜயலலிதா நடித்த
தினசரி 4 காட்சிகள்,
**நூற்றுக்கு நூறு**

தமிழ் நாட்டில் 58 வாரங்களும், ஈழத்தின் தலைநகர் கொழும்பில் 275 நாட்களும் தொடர்ச்சியாக காட்சியளித்து பெரும் சாதனையை நிலைநாட்டி
இப்பொழுது யாழ். மக்களுக்கு விருந்தளிக்கின்றது
**லிடோ** [யாழ்நகர்]
காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.
**ஆராதனா**
(சுஸ்டமன்கலர் சித்திரம்)
ராஜேஷ்கன்னா ✶ ஷர்மிளா தாகூர்
சுஜித்குமார் ★ பரீடா ஜலால்
நடித்தது.

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
★ ரவிச்சந்திரன்
✶ ஜெயலலிதா
✶ நாகேஷ்
✶ அசோகன்
✶ ஷீலா
நடித்த

**மூன்றெழுத்து**
(ஈஸ்ட்மன் கலர்)

புலோலி ஆண்கள் மகாவித்தியாலயம்
75-வது ஆண்டு நிறைவு விழாவும்
தாபகர்தினமும் பரிசளிப்பு விழாவும்
31-10-71 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-00 மணிக்கு நடைபெறும்
பிரதம விருந்தினர்
கலாநிதி பிரேமதாச உடகம
(கல்வி அமைச்சின் நிரந்தர காரியதரிசி)
பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பருத்தித்துறை, வ. தம்பிப்பிள்ளை,
28-10-71. (3095) அதிபர்.

**மரவள்ளிக்கிழங்கு**
ஒரு தொன் ரூபா 200-00 வீதம் கொள்வனவு செய்துவருகிறோம்.
தொடர்பு கொள்ளவும்:
ஸ்ரீலங்கா டப்பியோகா புறடக்ஸ்
C/O சுந்தரம் பிறதர்ஸ்,
73, மின்சாரநிலைய வீதி. யாழ்ப்பாணம்.

**நாகம்ஸ்சினிமா**
சுன்னாகம்
தினசரி: 4-30
சனி, ஞாயிறு: 10-30
AMERICA BY NIGHT
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
ஐந்து லட்சம்

**வெல்லிசினிமா**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 10-00
எம் ஜி ஆர். சரோஜாதேவி நடித்த
பெற்றால்தான் பிள்ளையா

**ராஜா** (யாழ்ப்பாணம்)
(தினசரி 4 காட்சிகள்)
எம். ஜி. ஆர்— வி. என். ஜானகி,
மாலினி—லலிதா—பத்மினி
நடித்த
**மோகினி**
(புத்தம் புதியகொப்பி)

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p.m.
Sat-Sundays 10-30 a.m.
Yul Brynner
in
RETURN OF
THE SEVEN
தினசரி பி.ப. 2-00, 10-00
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த
**புதியபூமி**
(புதிய கொப்பி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஐரோப்பிய பொதுச்சந்தையில்

# பிரிட்டன் சேர்வதற்கு தொழிற்கட்சியும் பெரும் ஆதரவு; தீர்மானம் நிறைவேறியது

லண்டன், ஒக்: 29

**ஐரோப்பியப் பொதுச் சந்தையில் சேருவதென்ற பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முடிவை பிரிட்டிஷ் காமன்சபை பெரும்பான்மை ஆதரவளித்து ஆதரித்துள்ளது.**

**அரசாங்கத்துக்கு ஆதரவாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த 70 உறுப்பினர்கள் வாக்களித்துள்ளனர்.**

பிரிட்டன் ஐரோப்பியப் பொதுச்சந்தையில் சேர்வதென்ற அரசாங்கத்தின் முடிவை காமன்சபை மிகப் பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றியுள்ளது. அரசாங்கத்தின் இந்த முடிவுக்கு ஆதரவாக 356 பேரும் எதிராக 244 பேரும் வாக்களித்தனர். அரசாங்கத்தின் தீர்மானம் 112 அதிகப்படி வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது. அரசாங்கத்தின் இத்தீர்மானத்திற்கு தொழிற்கட்சி உபதலைவர், முன்னாள் தொழிற்கட்சி அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்த இருவர் உட்பட 70 தொழிற்கட்சி அங்கத்தவர்கள் வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆறு நாட்களாக காமன்சபையில் நடைபெற்ற விவாதத்தின் பொழுது, பிரிட்டன் ஐரோப்பியப்பொதுச் சந்தையில் சேர்வதன்மூலம் காமன்வெல்த் நாடுகளுக்குப்பெருந் துரோகம் செய்வதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. கரோல்ட் வில்சன் குற்றஞ் சாட்டினார்.

ஐரோப்பிய நாட்டு மக்களின் நலனைக்காக்கும் முதல் திட்டம் இதுவாகுமென்றும் பிரிட்டன் இப்பொழுது ஒரு புதிய உலகத்தில் நுழைவதாகவும், எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்துப்பேசிய பிரிட்டிஷ் பிரதமர் திரு. எட்வேர்ட் ஹீத் கூறினார்.

**பலநாடுகள் ஆதரவு**

பிரிட்டனின் இந்தமுடிவை பல ஐரோப்பிய நாடுகள் வரவேற்றுள்ளன. அமெரிக்க அதிபர் நிக்சன் இம்முடிவுக்கு ஆதரவளிப்பதாக வெள்ளை மாளிகையைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். மேற்கு ஜெர்மனி அதிபர் வில்லிபிராண்ட் இது ஒரு சரித்திர முக்கியத்துவமான நிகழ்ச்சி என வர்ணித்துள்ளார்.

இவ்விதம் பலநாடுகள் பிரிட்டனின் முடிவுக்கு பாராட்டுத் தெரிவித்த போதிலும் பிரான்சிலிருந்து இதுபற்றி எவ்வித அரசாங்க அறிவித்தலும் வெளியிடப்படவில்லை.

### சாம்ராஜ்யபிரச்னையில்

## பிரதமரின் ஆர்வம்

லண்டன், ஒக். 29

தற்சமயம் பிரிட்டனுக்கு விஜயம் செய்துள்ள லங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, சாம்ராஜ்ய செயலகத்தின் காரியதரிசி ஜெனரல் திரு. ஆனல்ட் ஸ்மித்துடன் சாம்ராஜ்யப் பிரச்னைகள், விவகாரங்கள் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

திருமதிபண்டாரநாயக்கா தங்கியிருக்கும் ஸவோய் ஹோட்டலில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தைகள் ஒருமணி நேரம்வரை நீடித்தன.

கிழக்காசிய சாம்ராஜ்ய நாடுகளின் உறவுகள், இந்து சமுத்திரத்தை சமாதான பிரதேசமாக்க வேண்டும் என்ற இலங்கையின் கோரிக்கை, தொழில்நுட்பகூட்டுறவுக்கான புதிய சாம்ராஜ்ய நிதி, இவ்வருடம் அறிமுகப்படுத்தப்பட்ட பல அம்ச உதவிப் பரிவர்த்தனைத் திட்டம், தற்போதைய அரசியல் பிரச்னைகள் ஆகியவைபோன்ற பலதரப்பட்ட விடயங்கள் இப்பேச்சுவார்த்தைகளின் போது விவாதிக்கப்பட்டன என சாம்ராஜ்ய செயலகத்தின் நிருபர் ஒருவர் தெரிவித்துள்ளார். இப்பேச்சுவார்த்தைகளின் முடிவில் உத்தியோகபூர்வமான அறிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை.

இப்பேச்சுவார்த்தைகளின்பின், திருமதி பண்டாரநாயக்கா, சாம்ராஜ்ய பாராளுமன்ற சபையின் பிரிட்டிஷ் கிளை அளித்த மதிய விருந்தொன்றில் கலந்துகொண்டார்.

1911ம் ஆண்டு தாபிக்கப்பட்ட இச்சபை, பாராளுமன்ற ஆட்சிமுறையில் சாம்ராஜ்யம் கொண்டுள்ள மதிப்பையும் நல்லெண்ணத்தையும் வளர்ப்பதைத் தன் நோக்காகக்கொண்டுள்ளது.

## அரவிந்தர் பெயருக்கு எதிர்ப்பு

சென்னை, ஒக். 29

புதுச்சேரியில் நிறுவப்படவிருக்கும் மத்திய பல்கலைக் கழகத்திற்கு அரவிந்தரின் பெயர் சூட்டப்படுவதை எதிர்த்து புதுச்சேரியிலுள்ள மாணவர்கள் இன்று ஹர்த்தால் நடத்துகிறார்கள்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்துக்கு தமதுபெயர் வைக்கப்பட வேண்டுமென்று மாணவர்கள் கிளர்ச்சி தொடங்கியிருப்பதாகக் கூறப்படுவதில் உண்மையில்லையென்றும் இதில் தமது பெயர் வேண்டுமென்றே இழுக்கப்பட்டிருப்பதாகவும் தமிழ்நாடு முதல்வர் திரு. கருணாநிதி கூறியிருக்கிறார்.

# இந்தியாவுக்கு சோவியத் ராக்கட்டுகள் பிரதமர் இந்திரா மறுப்பு

வியன்னா, ஒக். 29

சோவியத் யூனியனிடம் இருந்து இந்தியா பெருமளவில் ஆயுதங்களையும் ராக்கெட்டுகளையும் பெறுவதாக வெளிவந்த செய்தியை இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி மறுத்துள்ளார்.

ஆஸ்திரிய விஜயத்தை முடித்துக்கொண்டு பிரிட்டனுக்குப் புறப்படுவதற்கு முன் திருமதி காந்தி வியன்னாவில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில், வங்காளப் பிரச்னை, பாகிஸ்தான் எல்லையில் பதட்டநிலை ஆகியவை சம்பந்தமாக பாகிஸ்தானையும் இந்தியாவையும் சமநிலையில் வைத்துப் பேசும் நாடுகளை அவர் வன்மையாகக் கண்டித்தார்.

பாகிஸ்தான் படைகள் இந்திய எல்லை வரை வந்தும் அதைப் பார்த்துக் கொண்டே இந்த நாடுகள் மௌனம் சாதித்தன. இதைக் கண்டு ஐக்கியநாடுகளோ, உலக நாடுகளோ கவலைப்படவில்லை. இந்தியாவின் பாதுகாப்பைக் கருதி தமது படைகளை எல்லைப் புறங்களுக்கு நகர்த்தியதும் தான் இந்த நாடுகள் கவலைப்படுகின்றன என்று வியப்புத் தெரிவித்த திருமதி காந்தி, கிழக்கு வங்காளத்தில் இதுவரை 10 லட்சம் பேருக்கு மேல் கொலை செய்யப்பட்டுள்ளனர். முஜிபுர் ரஹ்மான் உயிருடன் விடுதலை செய்யப்பட்டால் தான் கிழக்கு வங்காளப் பிரச்னை தீரும் என்றார்.

**இந்தியா-சீனு தூதரகப் பரிமாற்றம்**

இந்தியாவுக்கும், சீனுவுக்குமிடையே தூதரகப் பரிமாற்றம் பற்றி நிருபர் கேள்வி கேட்டபொழுது, சீனுவுடன் இந்தியா தூதரகத் தொடர்பை மீண்டும் ஆரம்பிப்பது பற்றிய கொள்கைக்கு இந்தியா எதிர்ப்பில்லை; இப்பொழுது இரு நாடுகளுக்குமிடையே உள்ள தொடர்பில் சிறிது முன்னேற்றம் காணப்படுகிறதென அவர் பதிலளித்தார்.

**ஆஸ்திரியப் பிரதமர் கருத்து**

ஆஸ்திரியப் பிரதமர் திரு. கிரைஸ்கி, வங்காளப் பிரச்னை பற்றி வெளிப்படையாகவே சில கருத்துக்களைத்

[4-ம் பக்கம் பார்க்க]

## டிட்டோ, நிக்சனுடன் பேச்சுவார்த்தை

வாஷிங்டன், ஒக். 29

யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோ அமெரிக்க அதிபர் திரு. நிக்சனையும், இராஜாங்க அமைச்சர் திரு. ரோஜர்ஸையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

வங்காள தேசப் பிரச்னை பற்றியும், பாகிஸ்தான் ஜனாதிபதி யாஹ்யாகான், இந்தியப் பிரதமர் திருமதி காந்தி, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பிரஷ்னேவ், எகிப்திய ஜனாதிபதி திரு. அன்வர் சதாத் ஆகியோருடன் மார்ஷல் டிட்டோ நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றியும் அறிவதில் ஆர்வம் காட்டியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியா வந்திருக்கும் கிழக்கு வங்க அகதிகளுக்கு உலக நாடுகள் உதவவில்லை என்பதை ரேடியோ பேட்டி ஒன்றில் மார்ஷல் டிட்டோ ஒத்துக்கொண்டார்.



குளிர்மையான,
மெந்தோல் பில்டர் முனை
சிகரெட்டுக்கள். தற்கால நவீன
புகையின்பத்திற்கு
பசுமையுடன் உங்களை
அழைத்துச்செல்வன

நீடிய குளிர்மையான மறுமலர்ச்சி மெட்டர்ஹோன்

CTC சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பழமைக் கலைகளைப் பேணிக்காப்போம்'

வவுனியா வெள்ளி

"வவுனியா மாவட்டத்திலுள்ள கிராமங்களில் வாழும் பெரியோர்களாலும் சிறுவர் சிறுமியராலும் இந்தச் சிறந்த வெளியரங்கில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும். இதற்குக் காரணம் கிராமங்கள் தோறும் இயங்காமல் நிர்வாகம் சீர்குலைந்து கிடந்த சனசமூக நிலையங்களை விவேகமும் ஆர்வமும் நிறைந்த கிராம வாலிபர்களின் உதவியுடன் வவுனியா மாவட்டக்கிராம சபைத் தலைவர்கள் புனரமைப்புச் செய்தமையே" என்று வவுனியா திறந்தவெளியரங்கில் வவுனியா மாவட்ட சனசமூக நிலைய சமாசத்தால் நடத்தப்பட்ட கலைவிழாவை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய நடுச்செம்டிகுளம் கிராம சபைத்தலைவரும் வவுனியா மாவட்ட கிராம சபைகளின் சமாஜச் செயலாளருமான திரு. பொ. திருஞானசம்பந்தன் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது: சனசமூக நிலையங்கள் போன்ற இயக்கங்களால்தான் கிராம மக்களை நல்வழியில் நடத்திச் செல்ல முடியும். நமது கலாசாரத்தையும் பழம்பெரும் பண்பாட்டையும் உணர்த்தக்கூடிய நாட்டுப் பாடல்களையும் நாட்டுக்கூத்துக்களையும் நன்கு அறிந்த வயது முதிர்ந்த பல பெரியார்கள் கிராமந்தோறும் இருக்கிறார்கள். சனசமூக நிலையங்களை இயக்குபவர்கள் அவர்களை ஆராய்ந்து அறிந்து அவர்களது திறமையை மற்றவர்களும் அறியச்செய்யவேண்டும். அத்துடன் அவர்கள் மூலம் கிராமிய சிறுவர் சிறுமிகளுக்கும் பழம் பெரும் நாட்டுக்கூத்துக்களையும் நாட்டுப்பாடல்களையும் பழக்கி பழமையான இக்கலை கலாச்சாரம் மறைந்து போகாது புதிய பரம்பரையைத் தோற்றுவிக்கவேண்டும். அப்போதுதான் புதிய நவீனங்களோடு நமது பண்பாட்டையும் கலை கலாச்சாரத்தையும் உணர்த்தக்கூடிய பழைய கலைகளையும் மறைந்து போகாது காப்பாற்ற முடியும். இந்தப் பணியில் வவுனியா மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் சனசமூக நிலையங்களின் உதவி பெற்று செயலாற்ற வேண்டும்.

விழாவில் நெடுங்குளம் சிறுமிகளின் சரஸ்வதி நடனம் சாளம்பைக்குளம் கிராம மக்களின் கோலாட்டம் முல்லைச்சகோதரிகளின் நாட்டிய நடனம்வவுனியாச் சகோதரிகளின் இன்னிசை விருந்து ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

# சிங்கள பாஷைப் போராட்டம் இன்னமும் முடிவுறவில்லையாம்

கோட்டை, வெள்ளி

"சிங்களப் பாஷைப் போராட்டம் இன்னமும் முடிவுபெறவில்லை. என்றும் சிங்கள கவிஞர்கள் அதை ஒருபோதும் கைவிடமாட்டார்கள். அன்று நாங்கள் வெளியிட்ட கவிதைத் துண்டுப் பிரசுரங்கள் இன்றைய பிரபல பத்திரிகை களைவிடத் திறமாக விளங்கினவென்பதால் மீண்டும் கவிதைத் துண்டுப் பிரசுரப் போராட்டத்தை தொடங்க வேண்டியிருக்கிறது."

அகில இலங்கைச் சிங்களக் கவிஞர் சம்மேளனத்தின் தலைவரான சமூக சேவைகள் அமைச்சர் திரு. ரி.பி.தென்னக்கோன் மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பிலுள்ள ஆட்சி மன்ற உறுப்பினர்களின் வாசஸ்தலமான சிராவஸ்தியில் நடைபெற்ற மேற்படி சம்மேளனத்தின் புதுவருட நிர்வாகிகள் தெரிவு சம்பந்தமான கூட்டத்தில் அமைச்சர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

தற்காலிகத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட வண. மீதெனியே விமலாநந்த தேரோ தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

பூரணமாக நாங்கள் எதிர்பார்க்கும் வெற்றி கிடைக்கும் வரையில் சிங்கள கவிஞர் பரம்பரையினால் நடத்தப்பட்டுவரும் சிங்களப் பாஷைப் போராட்டம் ஒரு நாளும் எந்தக் காரணத்தையொட்டியும் இடையில் நிறுத்தப்படமாட்டாதெனக் கூறிய அமைச்சர் சிங்களக் கவிஞர்கள் இப்பொழுதுங்கூட அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுத்தான் இருக்கிறார்கள் என்றும் சொன்னார்.

கவிஞர் மகாநாடுகளில் கலந்துகொள்வதற்கு அரசாங்க இலாகாக்கள், தனிப்பட்டோர் நிறுவனங்கள் போன்றவற்றில் சேவைபுரியும் கவிஞர்கள் கலந்துகொள்வதற்கு வசதியாகச் சம்பளத்துடன் விடுமுறை கிடைக்க வசதி செய்து தரும்படி அரசைக் கோரும் தீர்மானம் கூட்டத்தில் நிறைவேறியது.

சம்மேளனத்தின் புது வருடத் தலைவராகச் சமூக சேவைகள் அமைச்சர் திரு. ரி. பி. தென்னக்கோனும், இணைச் செயலாளர்களாக மிஹிந்தலை எம். பி. மதிராஜ தென்னக்கோன், பீமலல் கொட ஆகியவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

"தவஸ" பத்திரிகையில் இச்செய்தி வெளியாகியுள்ளது.

## நோர்வே சென்றார்

குருநகர், வெள்ளி

யாழ்ப்பாணம் புனிதவளன் விளையாட்டுக்கழகப் பொருளாளர் ஊ.குசைதாஸ் உயர் படிப்புக்காக நோர்வே சென்றார். வடபகுதியில் விளையாட்டுத்துறையில் சிறந்த கோல்காப்பு வீரராகவும், சமூக சேவையாளருமாகத் திகழ்ந்த இவர் காரை நகரில் உள்ள நோர்வே ஸ்தாபனத்தை முதன்முதலில் "மாலுமீன் என்டர் பிறைஸ்" என்னும் பெயருடன் ஸ்தாபித்தவர்களில் இவரும் ஒருவராவர். இவரது நோர்வேப் பயணத்தை முன்னிட்டுப் புனிதவளன் விளையாட்டுக் கழகம் இவருக்கு நேற்று முன்தினம் இராப் போசன விருந்தளித்துக் கௌரவித்தது. இவ்வைபவத்தில் பல கழகங்களின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## இந்தியாவுக்கு...

3-ம் பக்கத்தொடர்ச்சி

தெரிவித்திருப்பதாக நம்பப்படுகிறது. கிழக்கு வங்க மக்களின் பெரும்பான்மை வாக்குகளினால் தெரிவுசெய்யப்பட்ட அவாமிலீக் தலைவர் திரு. ஷேக் முஜிபுர் றஹ்மான் சிறையில் வைக்கப்பட்டிருப்பதற்கு அவர் கவலை தெரிவித்திருப்பதாக அறி-ப்படுகிறது.

# இன்றைய பலன்

ஐப்பசிமாதம் 13ந்திகதி

30-10-71

சனிக்கிழமை

மேஷம்- புதிய ஒப்பந்தமொன்று இன்று கைச்சாத்திடப்படலாம், பூமிப்பிணக்கில் சமரசம் உண்டு.

ரிஷபம்- மற்றவர்கள் ஆதரவு தப்பாமல் கிடைக்கும். இடமாற்றத்துக்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படலாம்.

மிதுனம்- சிலர் வாழ்க்கையில் திருமணப் பேச்சுக்கள் இடம்பெறும். தங்கையின் முன்னேற்றம் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

கடகம்-தொற்றுநோயால் பீடிக்கப்பட்டவர்களுடன் தொடர்புகொள்ள வேண்டாம். நிதானம்வேண்டும்.

சிம்மம்- பெரியவர்களின் உதவி உங்களுக்குத் தப்பாமல் கிடைக்கும். பிரிந்த குடும்பங்கள் இணைவதற்கான சந்தர்ப்பமுண்டு.

கன்னி- உங்கள் பலவீனத்தை மற்றவர்கள் ஆயுதமாகப் பயன்படுத்த முனைவர். மனத்திடமிருப்பின் இவர்களை வீழ்த்திவிட முடியும்.

துலாம்- விளையாட்டுப் பிள்ளையாக இருக்க விரும்புவீர். உமது விசித்திரப் போக்கு மற்றவர்களுக்கு வேடிக்கையைத் தரலாம்.

விருச்சிகம்- சகோதரர் ஒருவருடன் பகைத்துக் கொள்ளவேண்டியும் ஏற்படலாம். நிதானம் நன்று.

தனுசு- பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத் தேடித்தரும். செல்வாக்குப் பெருகும். புதுத்தொழிலில் முதலீடுசெய்வதற்கு ஏற்ற தினம்.

மகரம்- தனிமையைப் பெரிதும் விரும்புவீர்கள். கடமையில் தளர்ச்சி காணப்படும். நிம்மதியற்றதினம்.

கும்பம்- பிள்ளைபொன்றின் பிணிகவலையைத் தரலாம். அமைதியுடன் செயலாற்றின் எதிலும் நன்மை காணலாம்.

மீனம்- சுற்றுலா மேற்கொள்ளும்விருப்பம் மேலிடலாம். தன் சிறப்புக்கும் இடமுண்டு.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## ஆபத்தான நிலையில் பேராசிரியர்

சென்னை, ஒக். 29

வேலூரிலுள்ள கல்லூரி ஒன்றில் வாயுக்குழாய் வெடித்ததில் மாணவர் இருவர் காயமடைந்தனர். இவ்விபத்தில் காயமடைந்த பேராசிரியர் ஒருவர் ஆபத்தான நிலையிலுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## தமிழ்நிகழ்ச்சிகள்

30-10-71 சனி

(செய்திகள்: காலை 6-30: பகல் 12-45 மாலை 6-00: இரவு 9-00)

294 மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-00 பண்ணைச் செய்திகள், 7-15 அதிப்பாடல், 7-45 குரல்வளை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 ஒலிபரப்பு முடிவு.

இரவு 6-10 மாணவர்மன்றம் 6-30 பாட்டு- பி கந்தசாமிப் பிள்ளை, 7-00 இராமியச் சித்திரம்- "பாடும் பட்டாலே" 7-30 வானொலிக் குறுக்கெழுத்துப்போட்டி, இல:14 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-10 அறிவிப்புகள், 9-30 நாடகம்- "மேகம் மறைத்த நிலா..." 10-30 செய்தித் தொகுப்பு.


# காய்ச்சல், சளிசுரத்தைச் சகித்துக் கொண்டு வீணுகச் சங்கடப்பட வேண்டாம்




# டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

உங்களுக்குக் காய்ச்சல், சளிசுரம் வந்தால்
★ ஒய்வெடுங்கள்
★ உடம்பைச் சூடாக வைத்திருங்கள்
★ நீர் ஆகாரம் சாப்பிடுங்கள்
★ 4 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை 2 டிஸ்பிரின் மாத்திரை உட்கொள்ளுங்கள்

காய்ச்சல், சளிசுரம் வரும் போது காய்ச்சலைக் குறைக்கும் மருந்துகளைக் கிரமமாகப் பாவிக்க வேண்டியிருக்கும். கிரமமாகப் பாவித்தால், சில மருந்துகள் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கக் கூடும். டிஸ்பிரின் முற்றாகக் கரைவதாகையால், கரையாத மற்ற மருந்துகள் போல, உடம்புக்குப் பாதகமான துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சேர் பொருள்களும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்

டிஸ்பிரின் மிக விரைவாகவும் முற்றாகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. அதனால்தான் உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள் அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறார்கள்.

தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரிதமான அதிபாதுகாப்பான நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ஸ்பெக்டர் கொலை வழக்கு

# சந்தேக நபர் நால்வர் விடுதலை

கொழும்பு, வியா
கொழும்பிலுள்ள ஆமெரிக்கத் தூதராலயத்தின் மீது கடந்த மார்ச் மாதம் 6-ந் திகதி நடாத்தப்பட்ட தாக்குதலின்போது கொலையுண்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் கொலைவழக்குச் சம்பந்தமாக சந்தேகநபர்கள் 21 பேர் மீது தாக்கல்செய்யப்பட்ட வழக்கில் நால்வர் விடுதலைசெய்யப்பட்டனர்.

கோட்டை மேலதிக மாஜிஸ்திரேட் திரு. எஸ் சேனலிங்க இந் நால்வர் மீதும் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் போதியதாக இல்லையெனக் கூறி அவர்களை விடுதலைசெய்தார்

15 பேருக்கு எதிராக பொலிசார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர் இவ்வழக்கு சம்பந்தமாக சந்தேகிக்கப்படும் இருநபர்கள் இதுவரை கைதுசெய்யப்படவில்லை.

வெள்ளவத்தையைச் சேர்ந்த ஆர். சச்சிதானந்த, ஹல்ஸ்டோவ்விலுள்ள அந்தோனி சேவியர், பதுளையைச் சேர்ந்த ரி. ஏ. இராஜரத்தினு, தெகிவளையைச் சேர்ந்த கே. வித்தியாதர ஆகிய நால்வருமே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

பொலிசார் தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் டி எஸ் விஜயசிங்க பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் வீ சி ஜோசேப், விக்னேஸ்வரராஜா ஆகியோர் உதவியுடன் ஆஜரானார்.

இவ்வழக்கு மேல்விசாரணைக்காக நவம்பர் 9ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது (சி பி எ)

வேலைவாய்ப்பின்மையே

# பட்டதாரிகள் பிரச்னைக்குக் காரணம்?

கொழும்பு, வியாழன்
கொழும்பு பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்கள் குறைபற்றி ஆராய நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் தனது அறிக்கையை இன்று கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்திடம் கையளித்தது.

விடைமைப்பு அமைச்சின் நிரந்தரச்செயலாளர் நோர்த் அமரசேன் தலைமையிலான இக்குழு பட்டதாரிகளுக்கான பாடநூல்கள், தகவல் குறிப்பு, நிர்வாகம் சம்பந்தமாக ஆராய்ந்தது.

மாணவர்களுக்குச் சமமான சேமநலன் இல்லாமை அவர்களுக்கான பாடநூல் கல்பற்றுக்குறை. பட்டம் பெற்றபின் வேலைவாய்ப்பின்மை ஆகிய தன்மைகளே மாணவர்களிடையே காணப்படும் குறைபாடுகளுக்குக் காரணம் எனக் கூறும் அவ்வறிக்கையில், கொழும்பு பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களில் 60, 70 வீதமானோருக்கு தங்குமிட வசதி செய்யப்பட வேண்டுமென்றும், ஜி. சி. ஈ. உயர்தர வகுப்புக்குப் பதிலாக ஒவ்வொரு கல்வி மாவட்டங்களிலும் தொழில்நுட்பக் கல்லூரிகள் நிறுவப்பட வேண்டுமெனவும் கல்விநிலையங்கள், அரசாங்க திணைக்களங்களின் அதிகாரிகளைக் கொண்ட கல்வி வேலைவாய்ப்புச்சபை ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்றும், அச்சபை உயர்கல்வி வேலைவாய்ப்பளித்தல் போன்றவற்றிற்கு வழிகாட்ட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவில் திருவாளர்கள் நவரத்தினு, ஆர்தர் சில்வா ஜயவீர ஆகியோரும் அங்கம்வகிக்கனர்.

நாட்டின் அபிவிருத்திக்கேற்ப கல்வி அமைப்பு மாற்றி அமைக்கப்படுமென இவ்வறிக்கையை கையேற்றுப் பேசுகையில் கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஃமூத் கூறினர்.

## இலவச விநியோகம்

யாழ்ப்பாணம், வெள்ளி
'நாவலர் நீதி வாக்கியங்கள்' என்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் வாக்கியங்களைக் கொண்ட சிறுநூலையும், மற்றும் வீட்டுச் சுவரில் தொங்கவிடும் வகையில் நாவலர் பெருமானின் மணிமொழிகளையும் அச்சிட்ட அட்டைகளையும் மிகக் வைற் சோப் தொழிற்சாலையினர் பிரசுரித்து இன்று நாவலர் முத்திரை வெளியீட்டையொட்டி இலவசமாக விநியோகிக்கின்றனர்.

## 'வீதியைச் சீரமைக்குக'

பருத்தித்துறை, வெள்ளி
கரவெட்டி கிழக்குக் கிழவி தோட்ட வீதி நெல்லியடி பட்டின சபைக்கும் கரவெட்டி கிராம சபைக்குமிடையில் எல்லையாக இருப்பதால் இருசபைகளும் இவ்வீதியைக் கவனிப்பதில்லை. இதை விரைவில் சீர்திருத்தி உதவுமாறு கரவெட்டி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் திரு. சி. சிவலிங்கம் நெல்லியடிப் பட்டினசபையைக் கேட்டுள்ளார்.


# நொதேண் ஸ்போட்ஸ் கிளப்

[அங்கத்தவர்களுக்கு மட்டும்]
இராசா கட்டிடம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## ரெம்போலா

விளையாட்டுக்கள்
31-10-1971 காலை 11மணிக்கு
குதூகல ஆரம்பம்!

சமூகமளிக்கும் சகல அங்கத்தவர்களுக்கும் இலவச ரெம்போலா டிக்கட்டுகள் வழங்கப்படும்.
புதிய அங்கத்தவர்கள் பதிவுசெய்யப்படுவர்.
பெண்களுக்கு விசேட சலுகைகள்.
தினசரி தரமான பரிசுகள்:
நிகழ்ச்சிகள் கண்டிப்பாக அங்கத்தவர்களுக்கு மட்டும்.
மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி இல: 526
குறிப்பு! ஓய்வு நாட்களை உல்லாசமாகக் கழிக்க சகல வசதிகளும் கொண்ட எமது 'கிளப்' சேவையை வெகு விரைவில் எதிர்பாருங்கள் 310


# 75 ஆண்டு நிறைவு பெறும் வேலாயுதம் பாடசாலை

[ஸ்தாபகர் நினைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை நடைபெறுகிறது]



அதிபர்
வி. தம்பிப்பிள்ளை

ஈழநாட்டின் வடபகுதியில் பழமைப் புகழ்மிக்க துறைமுகப் பட்டினமாகிய பருத்தித்துறைநகரின் நடுநாயகமாய் நின்று எவ்திசையும் கல்விபரப்பிவரும் நிறுவனம் வேலாயுதம் கல்லூரியாகும். இக்கல்லூரியின் முதுபெரும் கல்விமானும் பெருவள்ளலுமாகிய வயிரமுத்து வேலாயுதம்பிள்ளையினால் ஆரம்பிக்கப்பட்டது. 1895ம் ஆண்டு அரசினர் இப்பாடசாலைக்கு அங்கீகாரம் அளித்தனர். அங்கீகாரம் பெறும் வரையில் தமது சொத்துக்களை விற்றதன் மூலம் கிடைத்த நிதியைக் கொண்டு பெருந்தகையான திரு. வேலாதம்பிள்ளை பாடசாலைச்செலவுகளைக் கவனித்து வந்தார். பல இன்னல்கள் காலாகாலங்களில் வந்தபோதும் தலைதாழ்த்தாது அவ்விடர்களை நீக்கிப் பல்லாயிரம் மாணவர்களுக்குக் கல்விச்செல்வம் அளித்து முன்னேறிவருகின்றது இப்பாடசாலை எழுபத்தைந்து ஆண்டுகள் இக்கலாசாலையின் ஸ்தாபகரை நினைவு கூருவது எமது கடனாகும்.

வள்ளல் வயிரமுத்து வேலாயுதபிள்ளை 1848ம் ஆண்டு பிறந்தார். செல்வம் படைத்த பெருங்குடியைச் சேர்ந்தவர். இந்தியா சென்று தமிழ், சமஸ்கிருதம் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வல்லுநராய்த் தாயகம் திரும்பி, சிலகாலம் அரசாங்க சேவையில் கடமை புரிந்தபின் ... தொழிலை மேற்கொண்டார். இப்புனிதசேவையில் ஈடுபட்டபோதே சைவப்பிள்ளைகள் சைவசமயச் சூழலில் கல்விகற்பதோடு தமிழ்க் கலாச்சாரங்களையும் பேணி வளர்க்க வேண்டுமென்பதையும் உணர்ந்தார். பருத்தித்துறை நகரில் விநாயகம்பிள்ளையால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலை உயர் வகுப்புவரை தமிழ்மொழிமூலம் கல்வி யூட்டிவந்தது. இக்காலத்தில் பலர் ஆங்கிலக் கல்வியை விரும்பியதால் வள்ளல் வேலாயுதம்பிள்ளை இத்தேவைகளைப் பூர்த்தி செய்யமுன்வந்தார்.

அரசாங்கம் பாடசாலைகளை 1961ம் ஆண்டு கையேற்ற பின்பு இப்பாடசாலை துரிதமாக முன்னேறி வருகிறது. 1962 ஆண்டு அதிபராக பதவியைபெற்ற திருவாளர் எம். ஏ. தம்பராசாவின் தலைமையில் கட்டிடங்களின் தோற்றங்கள் நன்கு மாற்றமடைந்தன. முன்னாள் மாவட்டக் கல்வி அதிபதி எஸ். தணிகாசலத்தின் உதவியோடு ஜி. சி. ஈ. உயர்தர வகுப்புக்கள் 1968ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன.

எட்டாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்புவரை நல்லாசிரியரைக் கொண்டு நற்பணி செய்து வரும் இக்கலாசாலை அதிபராகக் கடமையாற்றும் திரு வி. தம்பிப்பிள்ளை, ஆசிரியர்களின் அன்பு ஆதரவையும் பெற்றோரின் நன்மதிப்பையும் பெற்று கடமையாற்றிவருகின்றார். வள்ளல் வேலாயுதம்பிள்ளையின் கனவுகள் நனவாகிவிட்டன. இக்கல்லூரி மேலும் வளர்ந்து என்றென்றும் அழியாப் புகழுடன் மிளிரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

—சா. சேவற்கொடியோன்

யாழ்ப்பாணம், சனி
மறைந்த தமிழரசுக்கட்சித் தலைவர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் நினைவு அஞ்சலிக்கூட்டம் இன்று குருநகர் சனசமூகநிலையத்திற்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் மாலை 5 மணிக்கு நடைபெறும், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் உட்பட தமிழரசு எம். பி க்கள், பலர் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

